**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.18/2025**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பவித்ரா | மதம் | : இந்து |
| க/பெ | : மணிகண்டன் | ஜாதி | : -- |
| வயது | : 29 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**04.02.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 21.02.2025 அன்று நான் வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்ததற்கு எனக்கு கொடுக்கப்பட்ட ஒப்புகைச்சீட்டு இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(ஒப்புகைச்சீட்டு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி மனு நிராகரிகப்பட்டதற்கான இணையவழி சான்று தாக்கல் செய்கிறேன். **(சான்று வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பா செல்வம் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பட்டா எண்.7153ல் சாந்தி பெயரில் உள்ள பட்டா (2 எண்ணம்) இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 4 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1330ல் சாந்தி பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஆஸ்சீலியம் கல்லூரியில் கொடுக்கப்பட்ட மாற்று சான்று அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(மாற்று**

**சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.05.2015ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட பிறப்பிடச் சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பிறப்பிடச் சான்று வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.05.2015ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட வருமான சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வருமான சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 22.05.2015ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட சாதி சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(சாதி சான்று வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வருமான வரி அட்டை அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(வருமான வரி அட்டை சான்று வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்கிறேன். **(திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருமண பதிவு சான்று அசல் தாக்கல் செய்கிறேன். **(திருமண பதிவு சான்று வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)